திருவெண்ணைநல்லூர் கம்பன் விழா அக்குழுவின் தலைவர் அஞ்சுகம் கணேசன் தலைமையில் நடைபெற்றது. கௌரவத் தலைவர் கு.சரவணகுமார் முன்னிலை வகித்தார். விழாவில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம் சிவ சக்திவேல் உள்ளிட்ட பள்ளி மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கா.அழகையா – திருமதி ஈஸ்வரி ஆகியோர் மகள் அபர்ணா; சூரம்புலி, அ.பெரியண்ணன் – திருமதி அமுதா ஆகியோரது மகன் மணிமாறன் திருமணத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ மற்றும் மண மக்களின் உறவினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மீனவர் பிரச்சினைக்கு

இந்தியா - இலங்கை குழு பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்!

புதுடெல்லியில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

புதுடெல்லி, பிப். 5 -

பேரறிஞர் அண்ணாவின் 56வது நினைவு நாளை ஒட்டி, டெல்லியில் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தலைமையில் தி.மு.க. எம்பிக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். டெல்லியில் உள்ள அண்ணா - கலைஞர் அறிவாலயத்தில் பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளையொட்டி அவரது திருவுருவப்படம் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி, அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒவ்வொரு முறையும் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கும்போது, மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஆனால், ஒன்றிய அரசாங்கம் நம்முடைய மீனவர்களுக்கும், இலங்கையில் இருக்கக் கூடிய மீனவர்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடத்திட வேண்டும். இதற்கு இலங்கை அரசாங்கத்திடம் பேசி நிரந்தர தீர்வு காண்பதற்காகக் குழுக்களை அமைப்பதாகப் பல ஆண்டுகளாக ஒன்றிய அரசு சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர அந்த கூட்டங்கள் நடைபெற்றதாக எந்த செய்தியும் கிடையாது.

அந்த குழு கூட்டங்கள் நடத்தி, இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று நாங்கள் மறுபடியும் வலியுறுத்துகிறோம். விரைவிலேயே ஒன்றிய அரசாங்கம் அங்கே கைது செய்யப்பட்டு இருக்கக் கூடிய நம்முடைய மீனவர்களை மற்றும் அவர்களுடைய படகுகளோடு மீட்டுத் தரவேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் மீண்டும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

தமிழ்நாடு தொடர்ந்து பல்வேறு விதங்களில் வஞ்சிக்கப்படுகிறது. ஆளுநர் பிரச்சினைகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகள் குறித்து நாங்கள் நாடாளுமன்றத்தில் விவாதிப்போம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.

‘உடான்’ திட்டத்தின் கீழ் பணிகள் நிறைவுபெற்றது:

நெய்வேலி மற்றும் வேலூருக்கு விரைவில் விமானச் சேவை தொடங்கும்!

மாநிலங்களவையில் – டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, பிப்.5-

மாநிலங்களுக்குள்ளாக மண்டலங்களை விமான சேவை மூலம் இணைக்க வகை செய்யும் உடான் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ள விமான நிலையங்கள் எவை? அதற்கான ஏற்பாடுகள் எந்த நிலையில் உள்ளன? எப்போது அவை பயன்பாட்டுக்கு வரும் என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் முரளிதர் மொஹல் அளித்த பதில்:

விமான சேவை மூலம் மண்டலங்களை இணைக்கும் உடான் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் சேலம், வேலூர், நெய்வேலி, தஞ்சாவூர் மற்றும் ராமநாதபுரம் ஆகிய ஐந்து இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்தந்த ஊர்களில் விமான நிலையங்களை அமைக்கும் பணியும், மேம்படுத்தும் பணிகளும் நடந்து வருகின்றன. இதில் சேலத்திலிருந்து விமான சேவை தொடங்கப்பட்டுவிட்டது.

நெய்வேலி மற்றும் வேலூரில் விமான நிலையப் பணிகள் நிறைவடைந்து, அது தொடர்பான லைசென்ஸ்களைப் பெறும் பணிகள் நடந்து வருகிறது. விரைவில் இந்த இரண்டு ஊர்களிலும் விமான சேவை தொடங்கப்பட இருக்கிறது.

ராமநாதபுரத்தில், விமானநிலையம் அமைக்கத் தேவையான இடத்தை கையகப்படுத்தும் பணியில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டிருக்கிறது. தஞ்சாவூரில் விமான நிலைய அணுகு சாலைக்கான இடம் விமான நிலைய ஆணையத்தின் வசம் வந்ததும் கட்டடப் பணிகள் தொடங்கும்.

இதுதவிர, தமிழ்நாட்டில் அரக்கோணம், செட்டிநாடு, சோழவரம், சூலூர் மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய இடங்களில் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக பயன்படுத்தப்படாமல் இருக்கும் விமான ஓடுபாதைகளை சீர்படுத்தி அவற்றை உடான் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ஏலம் விடவும் துறை ரீதியான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

உடான் திட்டம் என்பது, வணிகம் சார்ந்த ஒரு திட்டமாகும். உடான் திட்டத்தின் கீழ் ஒரு மார்க்கத்தில் விமான சேவை தொடங்கப்பட்டால், அதற்கு கிடைக்கும் வரவேற்பு, கூடுதல் தேவை உள்ளிட்ட பல காரணிகளை வைத்து அவ்வப்போது அந்த விமான மார்க்கத்திற்கான ஏலம் நடைபெறும்.

விமனங்களை இயக்கும் நிறுவனங்கள் இத்தகைய விமான மார்க்கங்களை தொடர்ச்சியாக கண்காணித்து ஏலத்தில் பங்கேற்பார்கள். ஏலத்தின் முடிவில் விருப்பமுள்ள, தகுதியான நிறுவனத்திற்கு விமானங்களை இயக்க அனுமதி வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் முரளிதர் மொஹல் தெரிவித்தார்.

தி.மு.க.
இளைஞர் அணி
கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்
புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
09.02.2025 ஞாயிற்றுக்கிழமை	மாலை 3.00 மணி	கடலூர் மேற்கு	தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 01-02-2025

தி.மு.க.
இளைஞர் அணி
கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்
புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்
இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–3 க்கு உட்பட்ட காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 03-02-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

புதுச்சேரி மாநிலம் திருபுவனை மேம்பாலம் அருகில் சர்வீஸ் சாலை அமைத்திட வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் நடைபெற்ற மக்கள் திரள் ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா சிறப்புரை ஆற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.